# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடமாகாணம்
## பயிற்சிப் பரீட்சை - ஜனவரி 2017

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

## வினாத்தாள் - II

**1**

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் ......................................................

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.

- ✸ உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்
- ✸ மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- ✸ இவ்வினாத்தாளில் 65 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக
- ✸ நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- ✸ விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ✸ செய்கை வேலைக்காக ஒருதாள் வழங்கப்படும்

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | ஒப்பம் |
|---|---|
| முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதெனச் சான்றுப் படுத்துகின்றேன். | V/II/T/ |
| இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரிசீலனையின் மதிப்பீடு சரியானதெனச் சான்று பகிர்கின்றேன். | V/II/T/ |
| கணித பரீட்சகர் மதிப்பீடு வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன் | V/II/T/EMF/ |
| பிரதம பரீட்சகர் மேற்பார்வை செய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதெனத் தெரிவிக்கின்றேன் | V/II/T/CH/ |

**கீழே தரப்பட்ட பந்தியை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

மனிதனது தேவைகளை நிறைவு செய்ய உருவாக்கப்பட்ட சாதனம் கணினியாகும். இது ஒரு மின்னணுச் சாதனமாகும் இது ஆசிரியராகப் பாடம் சொல்லித் தருகின்றது. கல்வி சம்பந்தமான விடயங்களையும், உலகளாவிய பொதுஅறிவு விடயங்களையும் அறிய உதவுகின்றது. இதற்குப் பேராசை கிடையாது. தனது பணிகளை நிறைவாகச் செய்யும். இது ஏளனமாகச் சிரிக்காது துரிதமாகவும் மெதுவாகவும் கற்க உதவுகிறது.

**01)** கணினியின் பயன்கள் 2 எழுதுக?

1) ......................................................................................................................................

2) ......................................................................................................................................

**02.** கணினி எவ்வகைச் சாதனமாகும்?

1) ......................................................................................................................................

**03.** உயர்திணைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக.

1) ......................................................................................................................................

**04.** "அறிவு" இச் சொல்லில் வந்துள்ள உயிர்க்குறிகளை எழுதுக.

1) ......................................................................................................................................

2) ......................................................................................................................................

**05. பின்வரும் சொற்களின் ஒத்தசொல்லை எழுதுக.**

1) பூரணம் :......................................................................................................................

2) குரு :...........................................................................................................................

**06. பிரித்து எழுதுக.**

1) சொல்லித்தருகின்றது : ......................................................................................................

2) மின்னணு : ......................................................................................................................

(10 x 1 = 10 புள்ளி)

**07. பின்வரும் சொற்களில் சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

| | | | |
|---|---|---|---|
| 1) பதட்டம் | 2) பதற்றம் | 3) பதட்றம் | 4) பறட்டம் |
| 5) ஆராயிச்சி | 6) ஆராய்ச்சி | 7) ஆராச்சி | 8) ஆறாட்சி |

(2 x 1 = 2 புள்ளி)

**08. கீழே தரப்பட்ட வாக்கியங்களுக்குப் பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.**

1) நான் எப்பொழுதும் புத்தகங்களை ................................................................. (வாசித்தேன், வாசிப்பேன்)

2) கிளி பழங்களையும் தானியங்களையும் விரும்பி ................................. (உண்ணும், உண்ணுகின்றது)

(2 x 1 = 2 புள்ளி)

**09. பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

1) கூழுக்கும் ஆசை ..........................................................................................................

2) நிழலின் அருமை ..........................................................................................................

(2 x 1 = 2 புள்ளி)

சுட்டெண் :..................

**10. தரப்பட்ட சொற்களை கீழ்வரும் அட்டவணையில் உரிய இடத்தில் எழுதுக.**

(ஓடுகிறான், மாணவன், நீ, பெரிய, நான், அவர்கள், அரசி)

| பெண்பால் | வினைச்சொல் | அடைமொழி | முன்னிலை |
|---|---|---|---|
| | | | |

(4x½-2 புள்ளி)

**11. கீழே தரப்பட்டுள்ள பாடலில் உள்ள வெற்றிடத்தை பூரணப்படுத்துக.**

நூலகம் என்பது தேன் கூடு
நூல் ஒவ்வொன்றும் தேன் துளிகள்
....................................................................
நூறாயிரமாம் நன்மலர்கள் (1 புள்ளி)

**12. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் ஆக்குக.**

1) வேண்டும் / பந்தியாக / ஒவ்வொரு / வாசிக்க / நாங்கள்

..........................................................................................................................................

2) அவனுடைய / பதில் / கேள்விக்குப் / சொல்லவில்லை / பெரியவர்

..........................................................................................................................................

(2 x 1 = 2 புள்ளி)

**13. பின்வரும் பிராணிகளின் இளமைப் பெயரை எழுதுக.**

1) அணில் :- ...........................................................................

2) தவளை :- ........................................................................... (2 x 1 = 2 புள்ளி)

**14. கீழே தரப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

1) விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது ..................................................................................

(1 x 1 = 1 புள்ளி)

**15. பின்வரும் சுருக்கக் குறியீடு உணர்த்தும் கருத்தை எழுதுக.**

1) இ.மி.ச : ....................................................................................................... (1 x 1 = 1 புள்ளி)

**16. பின்வரும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.**

எழுவாய் பயனிலையைக் கருத்திற் கொண்டு ஆறு சொற்களுக்குக் குறையாது எழுத்துப் பிழைகளின்றி எழுதுதல் வேண்டும். (எழுத்துப் பிழைகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.)

"நான் பூங்காவிற்குச் சென்ற போது .......

1) ..........................................................................................................................................

2) ..........................................................................................................................................

3) ..........................................................................................................................................

(3 x 2 = 6 புள்ளி)

**17. பின்வரும் சொற்கள் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழில் எழுதுக.**

1) வௌவால் : ........................................................................

2) கட்டில் : ........................................................................ (2 x 1 = 2 புள்ளி)

**18.** **பின்வரும் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

1) (DH) தும்ரிய ஸ்தானய ........................................................................................

2) கீயத? ................................................................................................................ (2 x 1 = 2 புள்ளி)

**19.** **கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் மாற்றி எழுதுக.**

1) அவதானமாக இருங்கள் ...................................................................................... (1 x 1 = 1 புள்ளி)

**20.** **கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.**

1) Can I help you? ............................................................................................................

2) I am sorry ....................................................................................................................


(1x 2 = 2 புள்ளி)

**21.** **கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.**

1) Do .................................................................(we, you) like apple?

2) please bring .................................................................(is, me) a pen (1x 2 = 2 புள்ளி)


**22.** **கீழ்வரும் எண்சட்டத்தில் வகை குறிக்கப்படும் எண்ணை சரியாக இலக்கத்தில் எழுதுக.**




______________ (2 புள்ளி)

**23.** **இலக்கத்தில் தரப்பட்ட எண்ணை சொற்களில் எழுதுக.**

3249 - .................................................................................................................................... (2 புள்ளி)

**24.** 

சாடியில் உள்ள பூக்களின் எண்ணிக்கைக்கு முன்னாலும் பின்னாலும் வரும் எண்களை உரோமன் இலக்கத்தில் எழுதுக.

.................................. .................................. (2 புள்ளி)

**25.** ஒரு குவியலில் 7315 தேங்காய்கள் இருந்தன. அதனுள் மேலும் 579 தேங்காய்களை கண்ணன் சேர்த்து விட்டான். தற்போது குவியலில் உள்ள மொத்தத் தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

........................................................................................................ (2 புள்ளி)

**26.** தமயந்தி 2935 மாபிள்களை ஒரு பேணியில் வைத்திருந்தாள் அவற்றில் 547 மாபிள்களைத் தனது தம்பியிடம் வழங்கினாள். தற்போது தமயந்தியிடம் உள்ள மாபிள்கள் எத்தனை?

........................................................................................................ (2 புள்ளி)


**27.** **கீழே தரப்பட்டுள்ள எண்களைப் பயன்படுத்தி வினாக்களுக்கு விடை தருக.**

| 183 | | 465 | | 374 | | 527 |

1) கூட்டுத்தொகை 557 ஆகப் பெறக்கூடிய இரு எண்களையும் எழுதுக. (................) (................)

2) தரப்பட்டுள்ள எண்களில் ஓர் எண்ணில் இருந்து இன்னொரு எண்ணைக் கழிக்கும் போது வரும் விடை 344 ஆகும். அவ்விரு எண்களும் எவை?

(................) (................) (2 புள்ளி)

28. 


அருகே தரப்பட்டுள்ள இரு வடிவங்களிலும் உள்ள சமச்சீர் அச்சுக்களின் மொத்த எண்ணிக்கை யாது? .......................................

(2 புள்ளி)

29. 

மேலே தரப்பட்டுள்ள உருவில் நிறந் தீட்டப்பட்டுள்ள பகுதியை தசம எண்ணில் எழுதுக.

............................................................. (2 புள்ளி)


30. ஒரு பிள்ளைக்கு 5 புத்தகங்கள் வீதம் கிடைக்கக் கூடியதாக 143 புத்தகங்கள் பங்கிடப்பட்டன. அப் புத்தகங்களை எத்தனை பிள்ளைகளுக்கு கொடுக்கலாம்.

1) .......................................

2) மீதி எத்தனை புத்தகங்கள் .................................. (2 புள்ளி)

31. 250cm நீளமான துணியில் இருந்து எத்தனை ½m துணித் துண்டுகளை வெட்டி எடுக்கலாம்.

................................................ (2 புள்ளி)

32. 



1) இவ்வுருவின் உள்ளே உள்ள செங்கோணங்கள் எத்தனை? ..................................

2) இவ்வுருவின் சுற்றளவு யாது? .................................................... (2 புள்ளி)

33. ஒரு தொட்டியில் 7l 500ml நீர் இருந்தது. அதனுள் விகாஸ் 2l 250ml நீரை ஊற்றி பின் 4l 325ml நீரை வெளியே எடுத்தான். தற்போது தொட்டியில் உள்ள நீரின் அளவு யாது?

.....................l.....................ml (2 புள்ளி)

34. தரப்பட்ட வரைபைப் பயன்படுத்தி 2 வசனம் எழுதுக.




1) ........................................................

1) ........................................................ (2 புள்ளி)

35. விலைப்பட்டியலை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

| பொருட்கள் | அளவு | ரூபா | சதம் |
|---|---|---|---|
| தேங்காய் எண்ணெய் | 1l | 150 | 00 |
| சீனி | 1kg | 100 | 00 |
| தீப்பெட்டி | 9 | 40 | 50 |
| சன்லைட் | 3 கட்டி | 135 | 00 |
| அரிசி | 1/4 kg | 30 | 00 |
| பருப்பு | 250g | 25 | 00 |

1) விந்தன் விலைப்பட்டியலுக்கு அமைவாக பின்வரும் பொருட்களை வாங்கி இருந்தால் அவற்றுக்கு கொடுக்க வேண்டிய மொத்தப் பணம்

½ லீற்றர் தேங்காய் எண்ணெய் =..........................................

1 டசின் தீப்பெட்டி =..........................................

¾ கிலோகிராம் பருப்பு =..........................................

மொத்தப்பணம் =.......................................... (2 புள்ளி)

2) ½ கிலோகிராம் சீனி =..........................................

4 சன்லைட் =..........................................

750g அரிசி =..........................................

மொத்தப்பணம் =.......................................... (2 புள்ளி)

**36 தொடக்கம் 65 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையை தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.**

36. சித்திரை மாதம் பூக்கும் தாவரம் எது

1) தேக்கு 2) இலுப்பை 3) இறப்பர் 4) முள்முருக்கு

37. அசுத்த நீரினால் ஏற்படும் நோய்

1) நீரிழிவு 2) யானைக்கால் 3) நெருப்புக்காய்ச்சல் 4) டெங்கு

38. பூக்களுக்கு தீங்கு விளைவிப்பது

1) பச்சிலைப்பூச்சி 2) தேனீ 3) வண்ணத்துப்பூச்சி 4) காகம்



39. கூர்மையான கேட்டல் திறன் கொண்ட பிராணி


1) பசு 2) நாய் 3) யானை 4) குரங்கு

40. நீர் வெறுப்பு நோயை உண்டாக்கும் பிராணி

1) பூனை 2) தேள் 3) மாடு 4) அட்டை

41. பலகையில் துளையிடப் பயன்படும் உபகரணம்

1)  2)  3)  4) 

42. 


இவ் உருவில் உள்ள உபகரணத்தின் பெயர்

1) தொலைநோக்கி 2) ஊசித்துளைக்கமரா

3) இரவு வானில் சந்திரனை அவதானிக்கும் கருவி

4) கைவில்லை

43. 

இவ்வுருவிலுள்ள சாடி

1) வலைச்சாடி 2) தென்னம் பொச்சினால் ஆக்கிய சாடி

3) பழைய டயரை வெட்டி ஆக்கிய சாடி 3) மூங்கில் கொட்டுச் சாடி





44. கண்டி, நுவரெலியா, மாத்தளை ஆகிய மாவட்டங்கள் அடங்கும் மாகாணம்

1) சப்ரகமுவ 2) மத்திய மாகாணம் 3) வடமாகாணம் 4) கிழக்கு மாகாணம்

45. மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டின் நான்காவது படிநிலை

1) உதிப்பு 2) பிரார்த்தனை 3) உடலைத் தளர்த்துதல் 4) மலர்வு

46. தகரங்களை வெட்டப் பயன்படும் உபகரணம்


1)  2)  3)  4) 

47. “நண்டு நறுக்கி பொன்னி
ஆணமும் காச்சி
நாலாழி நெல்லுக்குத்திச்
சோறு மாக்கி.................”
என்னும் பாடல்

1) தொழிற்பாடல் 2) தோணிப்பாடல் 3) அரிவு வெட்டுப் பாடல் 4) தாலாட்டுப் பாடல்


48. தேசிய இலட்சினையில் நெற்கதிர், மலரிதழ், சூரியன், சந்திரன் என்பன முறையே குறிப்பது

1) உலக நிலைப்பாடு, தன்னிறைவு, தூய்மை 2) தன்னிறைவு, தூய்மை, உலக நிலைப்பாடு
3) தார்மீகம், தூய்மை, தன்னிறைவு 4) தன்னிறைவு, தார்மீகம், தூய்மை

49. 

இவ் உபகரணத்தின் பெயர்

1) ஒற்றைச்சில்லு வண்டி 2) பாக்குவெட்டி
3) இடுக்கி (சாவணம்) 4) போத்தல் மூடி திறப்பான்

50. 

தரப்பட்ட உருவிலுள்ள உபகரணத்திற்குரிய விளையாட்டு குறிப்பது

1) இரட்டைக்காலில் நடத்தல் 2) கயிற்றில் நடத்தல்
3) எட்டுக் கோடு 4) பொய்க்காலில் நடத்தல்

51. பச்சை நிறத்தைப் பெற சேர்க்க வேண்டிய நிறங்கள்

1) மஞ்சள், கபிலம் 2) சிவப்பு, நீலம் 3) நீலம், மஞ்சள் 4) மஞ்சள், சிவப்பு

52. அடிப்படைத் தையல் வகையில் அடங்காதது


1) சங்கிலித் தையல் 2) பெருநூலோடி 3) சோம் தையல் 4) விஸ்பம்

53. நீரைச் சுத்தமாக்கப் பயன்படும் இரசாயனப் பதார்த்தம்

1) சவர்க்காரம் 2) குளோரின் 3) சோடியம் 4) தேங்காயெண்ணெய்

54. கிராமிய விளையாட்டில் அடங்காதது

1)கபடி 2) வலைப்பந்து 3) வார் ஓட்டம் 4) சடுகுடு

55. 

உருவிலுள்ள விளையாட்டுக் குறிப்பது

1) சதுரங்கம் 2) பல்லாங்குழி 3) தாயம் 4) பசுவும் புலியும்

56. இலங்கையிலுள்ள இயற்கைத் துறைமுகம்

1) காலி 2) திருகோணமலை 3) கொழும்பு 4) அம்பாந்தோட்டை

57. மின்குமிழின் உள்ளே காணப்படும் இழை

1) தங்குதன் இழை 2) செப்புக்கம்பிச் சுருள் இழை
3) அலுமினியச் சுருள் இழை 4) இரும்புக்கம்பிச் சுருள் இழை

58. அயடீன் குறைபாட்டல் ஏற்படும் நோய்

1) ஸ்கேவி 2) மலேரியா 3) டெங்கு 4) கண்டமாலை

59. உணவு வகைகளைப் பாதுகாக்கும் முறைகளில் மணலில் புதைத்துப் பாதுகாக்கப்படுவது

1) மரவள்ளி 2) எலுமிச்சை 3) பாகல் 4) பனங்கிழங்கு

60. மீன் பிடித்தொழிலுக்குப் பயன்படாத உபகரணம்

1) கரப்பு 2) அத்தாங்கு 3) வனை சில்லு 4) தூண்டில்

61. ஒற்றுமையான விளையாட்டின் இறுதியில் எதிர்பார்க்கப்படாதது

1) வெற்றி பெறும் குழுவிற்காக மற்றவரின் அர்ப்பணிப்பு

2) குழுவின் வெற்றிகரமான தலைமைத்துவம்

3) குழுவாகப் பெறும் வெற்றி அக்குழுவிலுள்ள அனைவருக்கும் சொந்தமாகும்.


4) குழுவாகப் பெறும் தோல்வி அக் குழுத்தலைவனுக்குச் சொந்தமாகும்.

62. கட்புலன் மூலம் மட்டும் தகவல் பெறும் சாதனங்கள்

1) செய்திப் பத்திரிகை, சுவரொட்டி 2) சுவரொட்டி, கணினி

3) ஒலிபெருக்கி, வானொலி 4) இணையம், தொலைபேசி

63. கீழ் உள்ள உருவில் காட்டப்பட்டுள்ளவாறு வருணன் ஒரு வெற்றுக் கண்ணாடிக் குவளையின் அடியில் ஒரு பஞ்சுத் துண்டினை ஒட்டிய பின் அக்குவளையைக் கவிழ்த்து முற்றாக நீருள்ள பாத்திரத்தினுள் அமிழ்த்தினான். சிறிது நேரத்தின் பின்னர் கண்ணாடிக் குவளையை மீண்டும் அவ்வாறே மேலே எடுத்தான்.








குவளையின் உள்ளே அடியில் ஒட்டப்பட்டிருந்த பஞ்சுத் துண்டிற்கு நிகழ்ந்திருக்கக் கூடியது.

1) சிறிதளவு நனைந்திருக்கும் 2) முழுமையாக நனைந்திருக்கும்

3) கழன்று போயிருக்கும் 4) நனையாமல் முன்பு போலவே இருக்கும்

64. இரு உலர் மின்கலங்களும், ஒரு மின்குமிழையும், மூன்று கடத்திகளையும் மாத்திரம் பயன்படுத்தி மின்குமிழை ஒளிரச் செய்யும் முறைகளில் மிகச் சரியான முறையைக் காட்டும் உரு.

1) 
2) 
3) 
4) 

65. கீழ் உள்ள உருவில் காட்டப்படுகின்றவாறு ஒளிரும் மெழுகுவர்த்திகள் நான்கினை வேறுபட்ட உயரங்கள் கொண்ட நான்கு கண்ணாடிப் பாத்திரங்களினால் ஒரே தடவையில் மூடும் போது முதலில் அணையும் மெழுகுவர்த்தி

1) 
2) 
3) 
4) 

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
# பயிற்சிப் பரீட்சை 01 இன் விடைகள்

**தரம் - 05** **1** **வினாத்தாள் - II**

1. பொருத்தமான விடை (பந்தியிலிருந்து) 2. மின்னணுச்சாதனம் 3. மனிதன், ஆசிரியர்
4. விசிறி, கீழ்கால் 5. 1) நிறைவு 2) ஆசிரியர்
6. 1) சொல்லி+ தருகின்றது 2) மின் + அணு 7. 1) பதற்றம் 2) ஆராய்ச்சி
8. 1) வாசிப்பேன் 2) உண்ணும்
9. 1) மீசைக்கும் ஆசை 2) வெயிலில் தெரியும்
10. 1) அரசி 2) ஓடுகிறான் 3) பெரிய 4) நீ
11. நூலகம் என்பது பூங்காடு
12. 1) நாங்கள் ஒவ்வொரு பந்தியாக வாசிக்க வேண்டும்.
    2) பெரியவர் அவனுடைய கேள்விக்குப் பதில் சொல்லவில்லை
13. 1) குஞ்சு 2) பேத்தை 14. தீர்ப்பு
15. இலங்கை மின்சார சபை 16. பொருத்தமான வாக்கியங்கள்
17. 1) வவ்லா 2) அ (Dh) (ந்) த
18. 1) புகையிரத நிலையம் 2) எத்தனை 19. Be careful
20. 1) நான் உங்களுக்கு உதவலாமா? 2) நான் மனம் வருந்துகிறேன் / என்னை மன்னிக்கவும்
21. 1) You 2) me
22. 2424 23. மூவாயிரத்து இருநூற்று நாற்பத்தொன்பது
24. iv, vi 25. 7894
26. 2388 27. 1) 183, 374 2) 527, 183
28. 6 29. 0.3
30. 28 பிள்ளைகள் 3 மீதி 31. 5 துண்டுகள்
32. 1) செங்கோணங்கள் 6 2) 24 cm 33. 5l 425ml
34. பொருத்தமான 2 வாக்கியம் 35. 1) ரூபா 75 . 00, 54 . 00, 75 . 00, ரூ. 204 . 00 2) 50. 00, 180 . 00, 90 . 00, ரூ. 320.00
36. முள்முருக்கு 37. நெருப்புக்காய்ச்சல் 38. பச்சிலைப்பூச்சி
39. நாய் 40. பூனை 41. (1)
42. ஊசித்துளைக்கமரா
43. பழைய டயரை வெட்டி ஆக்கிய சாடி 44. மத்திய மாகாணம்
45. பிரார்த்தனை 46. (4)
47. அரிவு வெட்டுப்பாடல் 48. தன்னிறைவு, தூய்மை, உலக நிலைப்பாடு
49. இடுக்கி (சாவணம்) 50. பொய்க்காலில் நடத்தல்
51. நீலம், மஞ்சள் 52. சங்கிலித் தையல்
53. குளோரின் 54. வலைப்பந்து
55. சதுரங்கம் 56. திருகோணமலை
57. தங்குதன் இழை 58. கண்டமாலை
59. எலுமிச்சை 60. வனைசில்லு
61. குழுவாகப் பெறும் தோல்வி அக்குழுத் தலைவனுக்குச் சொந்தமாகும்.
62. செய்திப் பத்திரிகை, சுவரொட்டி 63. நனையாமல் முன்பு போலவே இருக்கும்
64. (2) 65. (2)